காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

13—2—72

★

உள்ளே......

தமிழர் திருநாள்!
(அமரர் அண்ணா)

பொருளற்ற புலம்பல்!
(தலையங்கம்)

வங்கத்தின் சிங்கநாதம்
(சிறப்புக் கட்டுரை)

தியாகபூமியே
திணறுதே!
(கட்டுரை)

விலை 25 காசு.

தியாகபூமியே! திணறுதே!!

நீண்ட இடைவேளைக்குப் பிறகு தினறும் தியாகபூமியை நேருக்கு நேர் சந்திக்கவேண்டியதாயிற்று. தியாகபூமித் திலகங்களில் சிலரையாவது சிந்திக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் சந்திக்கவேண்டியதாயிற்று. காலத்தையும் வீணாக்கி, 'காஞ்சி'யின் பக்கங்களையும் விரையமாக்கத்தான் வேண்டுமா என்னும் நண்பர்களின் மன்னிப்பை வேண்டி தியாக பூமியின் மூச்சுத் திணறலைச் சுட்டிக் காட்டுகிறேன்.

உறுதியாக ஒன்றை மட்டும் கூறிக் கொள்ளுகிறேன். இந்தக் கட்டுரை காஞ்சியின் சுவைஞர்களுக்கல்ல. தியாகபூமியையும் ஓர் ஏடென்று கருதிக் காலத்தைக் கொல்லும் சிலருடைய தூங்கும் மனசாட்சியின் தொடையில் கிள்ளியாவது அதன் தூக்கத்தைக் கலைக்க விரும்புகிறேன்.

பத்திரிகைக்கு என்று ஒரு பெயரையும் வைத்து, அதற்கென்று ஓர் ஆசிரியரையும் காட்டி, வெளியிடுவோர் அச்சடிப்போர் என்றெல்லாம் அறிமுகம் வேறு செய்து கொண்டு வியாழனுக்கு வியாழன் தவறாது வெளிவரும் ஓர் ஏடு, "பத்திரிகா தர்மம்" என்பார்களே, அந்த நேர்மையின் காலைப் பிடிக்கா விட்டாலும், அதன் வாலையாவது தொட வேண்டாமா? தொட்டுப் பார்க்கவாவது நினைக்க வேண்டாமா? சிந்திக்க வேண்டுவது நாமல்ல; என்றாலும் சிந்திக்க வேண்டாமா என்று கேட்க விரும்புகிறோம்; அதுவும் காரணங்களை வகைவகையாக வைத்துத்தான் கேட்கிறோம்.

சற்றுப் பின்னோக்கிப் பார்க்கட்டும் தியாகபூமி. சம்ஸ்கிருதப் பாதுகாப்பும், மாண்டு மறைந்து கொண்டுவரும் சனாதனக் கொடுமையைச் சாயாமல் தூக்கி நிறுத்தத் துடிக்கும் துடிப்பும் கொண்ட தியாகபூமி, ஜனசங்க மேடையேறி மத வெறிச் சலங்கை கட்டி ஆடட்டும்! இன வெறிப் பாடலுக்கு ஏற்ப ஆடட்டும்!! அதைப்பற்றி ஆய்வு நடத்திப் பார்க்கவேண்டிய அவசியத்தைச் சற்று தள்ளி வைப்போம் ஆனால், ஆலயப் பாதுகாப்பு மலர் என்ற பெயரில் ஒரு மலரினைப் போட்டு, ஆரியமொழியே அர்ச்சனைமொழி என்று ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஜனசங்க பூமிக்கு வந்ததால், அந்த ஆட்டத்தின் திரைமறைவுத் திருவிளையாடலைக் காட்டவேண்டிய பொறுப்பு காஞ்சிக்கு வந்தது.

நேர்மைக்கும் தமக்கும் நெடும் பகையில்லையென நம்பும் தியாக பூமிச் சீடர்கள் சற்றுக் கூர்மையாகக் கவனிக்க வேண்டுகிறேன்.

தியாக பூமியின் இந்து தேவாலயப் பாதுகாப்பு மலர் வந்தது 28—10—71-ஆம் நாள். அந்த மலரில் காணப்படும் நச்சுக் கருத்துக்களை நாட்டிற்குக் காட்டவேண்டிய பொறுப்பும் காஞ்சிக்கு அன்றே வந்துவிட்டது. 14–11–71-ஆம் நாள் திரு. கோ. அண்ணாமலை அவர்கள், 'தியாகத்தில் பூத்த மலர்' என்ற தலைப்பில் தியாகபூமியின் திருகுதாளங்களையும், தீய நோக்கத்தையும், முன்னுக்குப் பின் முரணாக உளறிக் கிடப்பதையும் அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்துப் பிய்த்துக்காட்டினார். கொண்ட கொள்கையில் திண்மையும், தெளிவும் இருந்திருக்குமேயானால், புலவரின் வாதங்களைப் பொடிப் பொடியாக்கியிருக்க வேண்டும். அர்ச்சனை மொழியிலிருந்து, ஆல

பொடியன்

யங்களின் உரிமைவரை அடுக்கடுக்காக ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியவர்கள், தங்கள் ஆதாரங்கள் ஆராயப்படுகிறது, புளுகும், பொய்யும் ஆதாரங்களா எனக் கேட்டு புழுதியாக்கப்படுகிறது என்றால், மானத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் மறவர்களாகித் தங்கள் திறங் காட்ட வந்திருக்க வேண்டும். 28—10—71-ஆம் நாள் ஆலயப் பாதுகாப்பு மலரின் அற்பங்களையும், அறிவீனங்களையும் 14—11—71 - ஆம் நாளிலிருந்து காஞ்சி எடுத்துக் காட்டத் தொடங்கியது. அடுத்து நான் 21—11—71இல் புலவர் கோ. அண்ணாமலை அவர்களைத் தொடர்ந்து எழுதினேன். இந்து முஸ்லீம் கலவரத்தைத் தூண்டிவிடும் போக்கில் அமைந்த பொல்லாமைகளை எடுத்துக் காட்டினேன்.

அப்போதும் 'தியாக பூமி' திருஞான சம்பந்தராக இருந்தது. ஆம்! ஊமையாகக் கிடந்தது. அதே இதழில் ஆலயப் பாதுகாப்பா? ஆரியப் பாதுகாப்பா?' என்று அண்ணன் அண்ணாமலை அவர்கள் அறைகூவல் விட்டாரே, ஆண்மையற்ற தியாகபூமி ஆமையாகிக் கிடந்தது. மூன்று கட்டுரைகளைக் கண்டும் மூளியாகிக் கிடந்த தியாகபூமியின் மூகமூடியை 28—11—71ஆம் நாள் இதழில் புலவரோடு பொடியனும் சேர்ந்து பிய்த்தெறிந்தான். புழுவிற்குரிய புத்தியிருந்தால் கூட தியாகபூமி பொங்கி எழுந்திருக்க வேண்டும்! எழுந்ததா என்றால் இல்லை!! ஆனால் புரண்டு படுத்தது. 3—12—71-ஆம் நாள் 'ஆத்திக நாத்திகர்கள்' என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டியது தியாக பூமி. அதில் 14, 21—11—71 ஆகிய இருவாரங்களில் வெளிவந்த கட்டுரைகளுக்கு மறுப்பொன்றும் காணப்படவில்லை.

அந்தஇதழில், எதையெதையோ போட்டுக் குழப்பிவிட்டு, 'அடுத்து வரும் இதழ்களில் தியாகபூமி, காஞ்சியின் கட்டுரைகளுக்குப் பதில் தரும் என்று எழுதியது, அதே இதழில், கேள்விபதில் பகுதியில் முரசொலி, மறவன் மடல் என்றெல்லாம் குறிப்பிட்டு சிண்டு முடியும் பணியை நிறைவேற்றிய 'ஊசி' யார் காஞ்சியின் ஆசிரியரையும் திட்டித் தீர்த்தாரே தவிர, காஞ்சியின் கட்டுரைகளுக்கு ஊசி முனையளவுகூட பதில் தரவில்லை, போகட்டும்!!

அடுத்துவரும் இதழில் பதில் வரும் என்றாரே தியாகபூமி ஆசிரியர் என்று 10—12—71 ஆம்நாள் இதழில் தேடினோம்; ஒன்றுமில்லை, சரி...ஆதாரங்களைத் தேடித் தேடி அலைகிறார் போலும் என்று அடுத்த இதழ் வரும் வரையிலும் காத்திருந்தோம். அதற்குள் 5—12—71 ஆம்நாள் காஞ்சியில் டாக்டர். முத்து நமசிவாயம் அவர்கள் 'தமிழ் போற்றி' என்ற தலைப்பில் அர்ச்சனை மொழி அன்னை மொழியே என்பதற்கான ஆதாரங்களை அள்ளித் தெளித்திருந்தார். நானும் ஒரு கட்டுரை எழுதினேன். 3-12-71இல் முரசு கொட்டியவர், விட்டேனா பார் என்று வீரங்காட்டியவர் 10-12-71 ஆம் நாளிலும் முடங்கிக்கிடந்தார். 10-12-71, 17-12-71 இதழ்களிலும் மூச்சற்றுக் கிடந்தார். போகட்டும் என்று பொறுத்துக் கொண்டோம். ஆனால், 11-12-71 இதழில் 'நெருப்பிலிடலாமா' என்னும் புலவரின் கட் கட்டுரையோடு, பொடியனும் முடிந்தால் மறுத்துப் பார்' என்றான். கோழைக்குக்கூட கோபம் பொத்துக் கொண்டு வந்திருக்கும். ஏனோ தெரியவில்லை பூமியர்க்கு வரவில்லை. 24-13-71 இதழிலாவது பூமியார், போர்ப்பரணி பாடுவார் என்று

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 13—2—72 | இதழ் 31

பொருளற்ற புலம்பல்கள்!

இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் உறவு முறையின்மீது அமெரிக்க அதிபர் நிக்சன் கொண்டுள்ள கருத்து பிழையானதாகும் என்றும், இந்தியாவுக்கு விரோதமான கருத்துக்களையும், கொள்கைகளையும் நிக்சன் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கதாகும் என்றும் அமெரிக்க நாட்டின் ஏடுகளும், இதழ்களும், பொதுமக்களும் ஒருமுகமாகக் கண்டனங்களை வீசத் தொடங்கிவிட்ட பிறகு, இன்னமும்தான் அறியாமையிலேயே மூழ்கி இருப்பதாக நாட்டவர் எண்ணிவிடக்கூடாது என்பதற்கு ஏதாவது சொல்லியாக வேண்டும் என்கிற முறையில், இந்தக் கிழமை, அமெரிக்கப் பார்லிமெண்ட் கூட்டத்தில், ஆண்டறிக்கை எனும் வடிவில் சில புலம்பல்களை வெளிப்படுத்தி இருக்கிறார் அதிபர் நிக்சன்.

> எல்லா பெரிய நாடுகளுடனும், சமநிலையான உறவு முறையை வைத்துக் கொள்வதில் இந்தியாவுக்கு அக்கறை இருந்தால் நாங்கள் ஆக்கரீதியான முறையில் செவி சாய்க்கத் தயாராயிருக்கிறோம;
>
> தன்னுடைய அண்டை நாடுகளிடம் தெற்கு ஆசியாவின் மிக சக்தி வாய்ந்த நாடு எப்படி நடந்து கொள்கிறது என்பதும் எங்களுக்கு அக்கறையுடைய விஷயமாகும்.

என்ற கருத்துக்கள் அதிபர் நிக்சனது புலம்பல்களில் சிறப்புடையனவாக இருக்கின்றன.

இந்தப் புலம்பலின் மூலம், இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

அதிபர் நிக்சன் உண்மையின் பக்கம் இனி என்றுமே திரும்பிப் பார்க்கத் தயாராக இல்லை என்பதும், ஆனால் கண்டனக் கணைகளை வீசிக்கொண்டிருக்கும் தம் நாட்டு ஏடு, இதழ் மக்களுக்கு ஏதாவது பதில் சொல்லித் தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி இருக்கிறார் என்பதும் புரிகிறது.

தொடையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடும் தன்மைபோல, நம் ஆத்திரத்தையும் கிளறி விட்டுவிட்டு, 'பார்த்தீர்களா, இந்தியா வழிக்கு வர மறுக்கிறது' என்று தம் நாட்டவர்க்கு எடுத்துக் காட்டவும் முயற்சி செய்திருக்கிறார் என்றுதான் எண்ணவேண்டி யிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்து அரசு, எல்லாப் பெரிய நாடுகளுடனும் சமநிலையான உறவு முறை கொண்டிருக்கவில்லை என்று எடுத்துக் காட்ட நினைத்த நிக்சன், அண்மையில் இந்தியா, இரஷ்யாவுடன் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை கருத்தில் கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

நுணுகி ஆராய்ந்தால், இந்தியா இதுவரையில் இரஷ்யாவைவிட, அமெரிக்காவின் பக்கமே அதிகம் சாய்ந்திருந்ததும், அதன் பொருளாதார உதவியையே அதிகம் நம்பிக் கொண்டிருந்தது என்பதும் புலப்படும். அதிபர் நிக்சன் அதே அறிக்கையின் இன்னோர் இடத்தில்

> **"ஒரு நாட்டின் ஜனநாயக அரசியல் முறை அல்லது அளவு காரணமாக, அதன் வெளிநாட்டுக் கொள்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் நாம் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நினைப்பது விவேகமல்ல……"**

என்று எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்தியா வெளிநாட்டுக் கொள்கையின் எல்லா அம்சங்களையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பது விவேகமானதல்ல என்று தமது நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்காட்டி இருக்கும் இதே கருத்தைத்தான் நாமும் நிக்சனுக்குத் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கும் என்பதை அறியாமலா அறிக்கை தயாரித்தார் என்று எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் இன்றுவரையில், உலகத்தின் அனைத்து ஜனநாயக நாடுகளையும் சமநிலையில் வைத்துத்தான் மதித்து வருகிறது என்பதற்கு ஒரேயொரு எடுத்துக் காட்டு, அதிபர் நிக்சன் யாகியாவைத் தன் வெள்ளாட்டியாகவே கொள்ள முனைந்து விட்டார் என்பது வெளிப்படையாகத் தெரிந்த பின்னரும்கூட, பிரதமர் இந்திரா காந்தி, அண்மையில் நடைபெற்ற போருக்கு முன்பாக, அனைத்து நாட்டு அரசுத் தலைவர்களையும் சந்தித்து சமாதானத்துக்கு ஒரு வழி தேடுங்கள் என்று கேட்டுக் கொண்டதுபோலவே, நிக்சனையும் சந்தித்துக் கேட்டுக்கொண்டார் என்ற செய்தியே போதுமானதாகும்.

ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை இன்னொரு நாடு அப்படியே ஏற்றுக்கொண்டுவிட முடியாது என்று எடுத்துக்காட்டத் தெரிந்த அவருக்கு, தன்னுட்டு வெளிநாட்டுக் கொள்கையின் எல்லா அம்சங்களையும், வெளிநாடு ஒன்று அப்படியே ஏற்றுக்கொண்டு விடாது என்று எண்ணிப்பார்க்கும் அளவுக்கு அறிவு முடங்கிக் கிடக்கிறதா என்று நினைக்கத் தோன்றுகிறது.

அமெரிக்க அரசின் சில வெளிநாட்டுக் கொள்கையினை இந்தியா வெளிப்படையாகவே நெடுங்காலமாகவே தன் அதிருப்திக் கருத்தினை எடுத்துக்காட்டி வந்திருக்கிறது என்பதற்கு வியட்னும் விவகாரம் சான்று காட்டிக்கொண்டு வருகிறது.

இது தொடர்பான மனக் காழ்ப்பின் காரணமாகவேதான் அதிபர் நிக்சன் பாகிஸ்தான் பக்கம் அதிகம் சாய்ந்து நின்று, இந்தியாவை எச்சரிக்கை நினைத்தார்; ஏமாந்தார் என்று சொல்லவேண்டும்.

பாகிஸ்தான் மீது ஒருவகையான பாசக்கணை விடுக்கத் தொடங்கிவிட்ட பிறகு, அதன் குற்றங்கள், துரோகங்கள்கூட அமெரிக்காவின் கண்களுக்குப் புலப்படாமல் போனதுதான் "வங்க தேசத்தின்"

மெய்ப்பாட்டுக்கு இன்று உண்மையான காரணமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதனை பெரும்பான்மையான உலக நாடுகள் உணர்ந்துகொண்டு வருகின்றன. அந்த உணர்வு அமெரிக்காவுக்கு ஏற்படாததினாலேயே, தான் இந்தியாவினால் மதிக்கப்படவில்லையே என்று அழுது புலம்பும் அவலத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

அண்டை நாடுகளிடம் இந்தியா சரியாக நடந்து கொள்ளவில்லை என்கிற அதன் மற்றொரு குற்றச்சாட்டுகூட இதே தன்மை கொண்டதுதான். பாகிஸ்தானை மனதில் வைத்துத்தான் இப்படிச் சொல்லி இருக்கிறார். எனவே, இதுவும் புலம்பல்தான் என்பதற்குக் காரண காரியங்கள் பல்லாயிரம் உண்டு என்பதை நம் நாடு அறியும்.

இவைகளை யெல்லாம் சொல்லிவிட்டு, இறுதியாக, இந்தியாவிடம் மறுபடியும் நட்புக் கொள்ள பேச்சு வார்த்தைகள் நடத்தத் தயார் என்றும் அறிவிக்கிறார் நிக்சன். அந்தப் பேச்சு வார்த்தையும், இந்தியா தன்னையும், பாகிஸ்தானையும் எப்படி மதிக்கிறது என்ற மதிப்பீட்டின் அடிப்படையில்தான் என்று அறிவித்திருப்பதானது, அதிபர் நிக்சன், இன்னமும் உலகத்தை ஏமாற்ற, தம் நாட்டு அறிவாளர்களை ஏமாற்ற நினைக்கும் வித்தை காட்டுகிறார் என்றுதான் நம்பவேண்டும்.

எனவே, இந்தியாவின் பதில் அமெரிக்காவின் கண்களைத் திறக்க சரியான ஆபரேஷனாக அமைந்திருக்க வேண்டும் என்றே இந்நாட்டு அறிவாளர்கள் நினைத்தால், அது பொருள் பொதிந்ததாகவே இருக்கும்.

—திருவாரூர் - முத்துராமன்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்த்தோம். அதற்குத் தண்டனையாக ஏமாந்தோம், 19-12-71 26—12—71 ஆகிய இரு இதழ்களிலும், தியாகபூமித் திருக் கூட்டத்தில் சேர்ந்த விகடனாரின் திருவிளையாடல்களைக் காட்டும் முகத்தான் 'தியாக பூமியின்' முரட்டு வாதங்களின் 'முட்டை' வடிவத்தைக் காட்டினோம். நமக்குச் \'சீச்சீ' என்றாகிவிட்டது. கும்பகர்ணனையாவது யானைவிட்டு எழுப்பலாம்; ஆனால், இந்த குருட்டுக்கனகராசுகளை எதை விட்டும் எழுப்ப முடியாது என்று ஓய்வெடுத்தோம். ஆயுதத்தைப் போட்டுவிட்டு, ஆடை அவிழ்வதும் தெரியாமல் ஓடுபவனை சும்மா விரட்டுவது அழகல்ல என்று நினைத்து, ஆலயப் புரட்டர்கள் ஆதாரங்களைத் தேடுகிறார்களாம்; அதுவரைப் பொறுப்போம் என்று அறிவித்தும் விட்டோம்.

'ஐயோ பாவம்' என்ற பரிதாபம் போலும் தியாகபூமிக்கு; 31—12—71 இதழில் காஞ்சி இதழில் வெளிவந்த பதினொரு கட்டுரைகளுக்கும் மறுப்பு வெளிவந்தது. இது அல்லவா வீ ர ம் என்று பாராட்டத் தோன்றும் சிலருக்கு; இப்போதாவது சூடு பிறந்ததே என்று புகழ்மாலை சூட்டத் தோன்றும் சிலருக்கு. அவர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்க வருந்துகிறேன். 14-11-71ல் தொடர்ந்து பதினொரு கட்டுரைகளுக்கும் தியாகபூமி என்ன பதில் அளித்தது என்பதைவிட, யாரை விட்டுப் பதில் கொடுத்தது என்பதிலேதான் வியப்பே அடங்கியுள்ளது. வாசகர் கடிதங்கள் என்ற பகுதியில் ஒரு வாசகரைப் படைத்து, பதிலைத் தயாரித்துள்ளது. அந்த பதிலும் சிண்டு முடியும் பாணியில் இருந்ததால்தான் கேள்வி பதில் ஊமையரின் உள்ளமே, ஆரணியாரின் பெயரில் வெளியான வேடிக்கையினைப் புரிந்துகொள்ள முடிந்தது.

'தேவாலயப் பாதுகாப்பு மலர் என்ற சூரியனைப்பார்த்து நாலைந்து வாரமாகப் பெருங் குரலெடுத்து ஊளையிட்ட பிறகு தற்போது கால்களுக்கிடையில் வாலைச் சுருட்டிக் கொண்டதாம்' காஞ்சி. இது ஒரு மறுப்பு; போதுமா?

"வாய் திறவாமல் மன்னித்த தங்களது பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்" இது ஒரு மறுப்பு போதுமா? ஓரடியில் உலகளந்த பெருமாளை விட இவர்கள் உயர்ந்து விட்டார்கள். 11 கட்டுரைகளுக்கு ஒரேவரியில் விடை; போதாதா?

3—12—71 இதழில் மறுக்கிறேன் என்று மார் தட்டிவிட்டு, வாலைச் சுருக்கிக் கொண்டதுகள். காஞ்சிப் பெருமலையோடு மோதிட முடியாமல் மூலையில் முடங்கிக் கிடந்ததுகள் நம்மை மன்னித்து விட்டதுகளாம்.

அழகிப் போட்டியில் கலந்துகொள்ள முடியாத குட்டரோகக் குருடி நான் கலந்துகொண்டால் நீங்கள் தோற்றிருப்பீர்கள் என்றாளாம்.

மறுப்பு எழுதமுடியாத மண்டூகங்கள் மன்னிக்கும் மேதைகளாக ஆகமுடியும் என்றால், நாட்டில் முட்டாள்களே இருக்கமுடியாது. போகட்டும்!!

இத்தனையும் வெளியிட்ட தியாக பூமி **7—12—72**இல் "யாரிடம் கதை அளக்கிறீர்கள்" என்று கரடி விட்டிருக்கிறது.

'தேவாலயப் பாதுகாப்பு மலரைப் பற்றித் தாறுமாறாக விமர்சனம் செய்துள்ள 'காஞ்சி' எழுத்தாளர் இருவருக்கும் இந்தக் கட்டுரையின் மூலம் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்' என்று மகுடமிடப்பட்ட அந்தக் கட்டுரையாவது, நம்முடைய வாதங்களுக்குப் பதில் தந்ததா என்றால் இல்லை.

பதினொரு கட்டுரைகளில் நாம் கேட்ட கேள்விகளுக்கு ஒன்றிற்குக் கூட விடையில்லை. எந்த வாதங்களையும் மறைமுகமாகக்கூட சந்திக்க முடியாத கட்டுரையாளர் கலைஞரைப் பற்றித் திட்டித் தீர்த்துவிட்டு, 'எத்தனை ஏழைகள் உங்கள் ஆட்சியில் சிரித்துள்ளனர்? பிச்சைக்கார நிதி என்னவாயிற்று என்று திரு. அண்ணாமலையைக் கேட்டுவிட்டு, பொடியன் பக்கம் திரும்பினார். 'வான்கோழி மயிலாக முடியாது' என்று ஒரே பதில்!! 'இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை;' மற்றொரு விளக்கம். தந்தை பெரியாரைப் பற்றித் தரக்குறைவான தாக்கு; அது ஒரு ஆராய்ச்சி!! ஏழைகளின் கண்ணீர் உங்களை அழிக்கும்; இப்படி ஒரு எச்சரிக்கை. புலவரும், பொடியனும் திருந்தவேண்டும்; இப்படி ஒரு அதட்டல்.

இதுதான் மறுப்பா? இப்படித்தான் வாதமா? இதற்கொரு மலரா? இதற்கொரு கொள்கை விளக்கமா? இதற்கொரு ஏடா? இதற்கொரு கனகராசா? ஊசியா?

தெளிவாகச் சொல்லுகிறேன். தியாக பூமி இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்ளட்டும்!! அர்ச்சனை மொழியாக அன்னை மொழியே இருக்கவேண்டும் என்பதை எதிர்க்கும் ஆதாரங்களை முடிந்தால் வைத்துப் பார்!! ஆரிய மொழி, தமிழகக் கோயில்களில் அர்ச்சனை மொழியாக இருக்கக்கூடாது என்பதற்கான ஆதாரங்களை எடுத்து வைக்கிறோம். ஒன்று, இரண்டு என்று மறுக்க வருகிறாயா? புள்ளி புள்ளியாக வாதங்களை வைத்து உன்னைச் 'சில்லி சில்லி' கேள்வி எறிகிறோம்; வருகிறாயா? வீணைத் திணறித் துடிக்காதே! வெளியே வா!!

*

தம்பி

தமிழர் திருநாள்

எந்தப் பணி எனக்கு இனிப்பும் எழுச்சியும் தந்து வந்ததோ,

எந்தப் பணியிலே நான் ஆண்டு பலவாக மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வந்திருந்தேனோ,

எந்தப் பணி மூலம் என்னை உன் அண்ணனாக நீ உள்ளன்புடன் ஏற்றுக்கொண்டு, பெருமிதத்துடன் உலகுக்கு அறிவித்து வந்தனையோ,

எந்தப் பணி வாயிலாக என் கருத்துக்களை உனக்கு அளித்து உன் ஒப்புதலைப் பெற்று அந்தக் கருத்துக்களின் வெற்றிக்கான வழியினைக் காண முடிந்ததோ,

எந்தப் பணியின் மூலம் தமிழகத்தை அறியவும், உலகத்தை உணரவும், தமிழ்ப் பண்பை நுகரவும் வழி கிடைத்துவந்ததோ,

எந்தப் பணி மூலம், எப்போதும் உன் இதயத்தில் எனக்கு ஓர் இடம் கிடைத்து அது குறித்து நான் அளவற்ற அகமகிழ்ச்சி பெற முடிந்ததோ,

அந்தப் பணியினை முன்புபோலச் செய்ய முடியாதவனாக்கப்பட்டு, முடியவில்லையே என்ற ஏக்கத்தால் தாக்கப்பட்டு, சூழ்நிலையின் கைதியாக்கப்பட்டுக் கிடக்கிறேன் என்பதனை அறிவாய்.

'சூழ்நிலையின் கைதி'—என்ற சொற்றொடருக்குத்தான், முதலமைச்சர் என்று முத்திரையிட்டிருக்கிறார்கள்.

தம்பி! தம்பி! தம்பி!—என்று கிழமை தவறாமல், பலப் பல ஆண்டுகள் உன்னை அழைத்து உரையாடி அளவளாவி வந்திருக்கிறேன், இரண்டுஆண்டுகளாக அந்த விருந்தினை இழந்து தவிக்கின்றேன்.

முதலமைச்சர் என்ற முறையில் பல பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களை அறிக்கைகள், சொற்பொழிவுகள், சட்டமன்ற உரைகள் மூலம் நாட்டுக்குத் தந்துவிட முடிகிறது-தனிமையாக உன்னிடம் உரையாடி மகிழ்ந்திட என்று நான் வகுத்துக்கொண்ட 'கிழமைக் கடிதம்' எழுதிட இயலவில்லை.

> மாநில சுயாட்சிக்கு உயிரூட்டம் தரப்பட்டிருக்கும் வேளை இது. 1969 பொங்கல் மலரில் அமரர் அண்ணா அவர்களால் எழுதப்பட்ட சுயாட்சி உயில்தான் இக் கடிதம்.
>
> சில இதழ்களில் துண்டு துண்டாக வருகின்றன. அதற்காகவே மீண்டும் முழுமையாகப் படைத்திருக்கிறோம்.

பிரச்சினைகளை விளக்கிட, ஐயப்பாடுகளைப் போக்கிட, அச்சம் துடைத்திட, மறுப்புக்கு மறுப்புரைக்க, 'வாழ்க வசவாளர்' என்று அவர்களையும் வாழ்த்திட. "தம்பிக்குக் கடிதம்" மிக நேர்த்தியான முறையில் பயன்பட்டு வந்தது.

எனக்குத் தோன்றும் எண்ணங்களை உன்னிடம் கூறிடுவதிலே, தனியானதோர் மகிழ்ச்சி.

எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியினை உன்னோடு பங்கிட்டுக் கொள்வதிலே ஓர் இன்பம்.

கவலை குடையும்போது, மன உளைச்சல் ஏற்படும் போது, உன்னோடு உரையாடி, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்ற எழுச்சி பெற்று வந்தேன்.

இப்போது? அந்த இன்ப நாட்களை எண்ணி எண்ணி ஏக்கம் கொள்கிறேன். சுமக்கும் பளுவினாலே கூனிக் குறுகி வாடுகிறேன். எத்தனை எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றிய கருத்துக்களைக் கூற நேரமோ, வாய்ப்போ இன்றித் தவித்திடுகிறேன்.

ஆயினும், முன்பு செலவிட்டதைக் காட்டிலும் அதிக நேரம், வேலைக்காக ஒதுக்குகிறேன். இலக்கியச் சுவை நுகர்ந்திட நேரமில்லை. கலை அழகினை எண்ணிட நேரமில்லை. வேலை! வேலை! வேலை! ஓயாத வேலை! உடலும் உள்ளமும் அலுத்துப் போகும் அளவு. கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கவே காலம் போதவில்லை—களிப்புப் பெற்றிட உன்னிடம் உரையாடிட நேரத்தைக் கண்டறிவதே மிகச் சங்கடமாகி விட்டது.

இந்தக் கிழமை எப்படியும் தம்பிக்குக் கடிதம் எழுதிட வேண்டும் என்று தீர்மானித்து எழுதத் தொடங்குவேன். தொலை பேசி மணி ஒலிக்கும்...

சிப்பா...

ஆமாம், நான்தான்...

எங்க ஊர் வாய்க்கால் விஷயமாக மனு அனுப்பினது பற்றி...

பரிசீலனையில் இருக்கிறது.

அண்ணா! நீங்க பார்த்து முடிவு செய்ய வேண்டியதுதானே, இதற்கு, என்ன பரிசீலனை தேவை?

அப்படி அல்லவே, இலாக்கா பரிசீலனை செய்தாக வேண்டுமே...

அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது ......எப்படியும் முடித்துக் கொடுத்தாக வேண்டும்.

சரி, சென்னைக்கு வரும்போது விளக்கமாகக் கூறுகிறேன்.

உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் அண்ணா!

ஆகட்டும்! ஆகட்டும்!

வேலைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். இளைப்பும் களைப்பும் அதிகமாகத் தெரிந்தது போன மாதம் பார்த்தபோது.

தம்பி! என் மனதுக்கு இனிமை தந்திடும் பணியிலே என்னை ஈடுபடுத்திக்கொள்ள முடியவில்லையே என்ற கவலை ஒருபுறம்; அத்துடன் பின்னிப் பிணைந்து கொண்டு என் உடல் நிலையைப் பற்றிய கவலை ஒருபுறம்.

என் பேரப் பெண், இளங்கோவனின் மகள் கண்மணி தன் மழலை மொழியில் பாடுகிறாள்.

நலந்தானா? நலந்தானா?

உடலும் உள்ளமும்

நலந்தானா?

என்று. எனக்கென்னமோ அந்தப் பாட்டைக் கேட்கும் போதெல்லாம், என் தம்பிகள் தங்கைகள், நாட்டின் நல்லோர் அனைவருமே என்னை நலந்தானா? என்று கேட்பது போலவே தோன்றுகிறது. கடந்த ஓராண்டாகவே, இந்தக் கேள்வி கிளம்பியபடி இருந்தது; அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளவேண்டிய அளவுக்கு உடல் நலம் பாழ்பட்டது. ஆனால் அதனால் ஏற்பட்ட கவலையை நான் உதறித் தள்ளும் விதமான அன்பும் கனிவும் நாடு முழுவதிலுமிருந்து கிடைத்தது. அரசியலில் நம்மோடு மாறுபட்டிருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன்—மனிதத் தன்மை அடியோடு மடிந்துவிடவில்லை என்பதனை உணர்ந்தேன்.

தம்பி! அந்த மனிதத் தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். மனிதத் தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே, இந்த மனிதத் தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன். என்னால் எந்தப் பிரச்சினையையும் மனிதத் தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ள முடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டு விடும்போது குமுறிப் போகிறேன். அக்ரமம் நடைபெற்றிடும்போது நெஞ்சில் வேல்பாய்கிறது. இந்நிலை உடலைப் பாதிக்கிறது; மருத்துவர்கள் பலர் என் உடல்நிலை தேறிடத் துணை நிற்கின்றனர். ஆனால், உன் புன்னகை தவழும் முகத்தை மனக் கண்ணால் காணும்போதுதான் உண்மையான 'மாமருந்து' கிடைக்கிறது. கிடைத்தற்கரிய அந்தச் செல்வத்தைக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கிலே திளைத்திருக்க எண்ணும் என்னை, தம்பி! நான் மேற்கொண்டுவிட்ட 'கடமை' வேலையைக் கவனி! வேலையைக் கவனி! என்று முடுக்குகிறது.

இன்று, எப்படியும் எழுதுவது—ஆண்டுக்கோர் நாள்—அருமைமிகு திருநாள்—பொங்கற் புதுநாள்—அதற்காக வெளிவரும் மலரில் எப்படியும் எழுத வேண்டும் என்று எண்ணிக்கொண்டு ஏடெடுத்தேன், எழுத! எடுத்து?

நிதிக் குழுவினருடன் பேசவேண்டிய பிரச்சினைகளைப் பற்றிய தகவல்களுடன் நிதித் துறைச் செயலாளர், அமைச்சர் மாதவனுடன் வந்தார்! ஒரு மணிக்குமேல் உருண்டோடி விட்டது — சிக்கலான பிரச்சினைகள்—பேசித் தீர்த்தாக வேண்டிய பிரச்சினைகள்—நமது மாநிலத்து வருவாய்த் துறையை எந்தெந்த முறையிலே செப்பனிட முடியும் என்பது பற்றி ஆய்ந்தறிய வேண்டிய கட்டம். உன்னை மறந்தேன் என்ற பொருள் கொள்வாயோ! விவர மறிந்த தம்பியாயிற்றே!! உனக்காகவும் சேர்த்து மேற்கொள்ளப்படுகிற வேலை என்பதனை அறிவாயே. பிரச்சினைகளைப் பேசினோம்; புள்ளி விவரங்களைச்



சரிப்பார்த்துக் கொண்டோம்; தொடர்பான நிகழ்ச்சிகள் பற்றிய முறைகளை வகுத்துக் கொண்டோம்.

அதற்குப் பிறகுதான் எழுத ஆரம்பித்தாயா அண்ணா! என்றுதானே கேட்கிறாய்.

அதற்குப் பிறகு அல்ல, தம்பி! அதைப்போல மூன்று நான்கு தவிர்க்க முடியாத வேலைகளைக் கவனித்தான பிறகு; எழுத வேண்டும் என்று முடிவு எடுத்ததற்கும் எழுதத் தொடங்கியதற்கும் இடையில் ஆறு ஏழு மணிகள் சென்றுவிட்டன. இந்நிலையில் நான் இருந்திடினும், பொங்கற் புது நாள் வாழ்த்தினைத் தெரிவித்துப் பெற்றிடும் மகிழ்ச்சியினை மட்டும் நான் இழந்துவிடமாட்டேன். நமக்கென்று உள்ள ஒப்பற்ற விழா அல்லவா அது. எத்தனையோ இன்னல்கள் தாக்கிடினும், அவைகளை மறந்து. ஒருநாள் மனைதொறும் மனைதொறும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிட என்று அமைந்த நாளல்லவா பொங்கற் புதுநாள். பேச்சிலே ஓர் இசை கலந்திடும் நாள், இத்திருநாள்! இந்நாளில், உனக்கு வாழ்த்துக் கூறுவதிதே பெற்றிடும் இன்பம் ஈடற்ற தல்லவா. எனவேதான், எப்படியும் எழுதுவது என்று உட்கார்ந்தேன்.

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒரு முறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கும்—விழாக்கள் பலப்பல நடாத்தப்படினும்—தமிழகத்தின் பொங்கற் புதுநாள் போன்றதோர் பொன்விழா இல்லை; நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; கேளிக்கைகள், மதுபான விருந்துகள் மிகுதியாக; எனினும் ஆர்ப்பரிப்பின்றி ஆனால் அக மகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுகளின்றி ஆனால் புதியதோர் பொலிவுடன், வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கற் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு எங்கும் இல்லை. நாட்டியக் கூடங்களிலே அமளி! பாதைகளிலே புது வேகம், மோதல், உயிர்ச் சேதம்! அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான அளவு! ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே, முதியவரும் மூதாட்டியும் இளைஞரும் இளநங்கையும் சிறுரும் சிறுமியரும் கலந்து எழுப்பும் பொங்கலோ! பொங்கல்! என்ற இசை, அது இங்கு எங்கும் இல்லை. இருந்திடத் தக்கவிதமான சமூக அமைப்பே இல்லை.

தம்பி! வறுமை வாட்டுகிறது, இல்லை என்று கூறவில்லை. எண்ணிடும் திட்டங்களை நிறைவேற்றிட வசதிகள் கிட்டவில்லை. அதனை மறைத்துப் பயனில்லை; வளம் கொழித்திட வழிதேடியபடிதான் இருந்து வருகிறோம், இன்னும் பொழுது புலரவில்லை; இவ்வளவும் உண்மை; ஆனால் தமிழகத்தில் பன்னெடுங்காலத்துக்கு முன்பிருந்து நாடு பல, தனது எல்லையை வகுத்துக்கொண்டு அரசு அமைத்துக் கொண்டு நிலவத் தொடங்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, நாம் பெற்றிருந்த கருத்துச் செல்வத்தை எண்ணிப் பார்த்திடும்போது, நமக்கு இன்றுள்ள எல்லாத் துயரங்களையும் ஒருகணம் மறந்து, வேறு எவரும் பெற முடியாத ஓர் பெருமித உணர்வினை நாம் பெற முடிகிறது. அத்தகைய கருவூலத்தை நமக்குத் தந்த தமிழ் நாட்டுக்கு, நாம் இதுநாள் வரையில் அரசியல் சட்ட திட்டத்தில், தமிழ் நாடு என்ற பெயரைக்கூடப் புகுத்தத் தவறினோமே, மறுத்து வந்தோமே, எதிர்த்து வந்தோமே என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணி வருத்தப்படுகிறார்களோ இல்லையோ, நானறியேன்—நாம்—இவர்களால் என்ன ஆகும்? என்ற ஏளனக்கணைகளால் தாக்கப்பட்ட நாம்—நாம் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றதன் விளைவாக இந்தப் பொங்கற் புதுநாளிலிருந்து, நாம் உலகுக்கு அறிவிக்க முடிகிறது. இது தமிழ் நாடு என்பதாக. பெயரில் என்ன இருக்கிறது என்று பேசிடும் பெரியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்—ஆனால் பாடினாரே பாரதியார்,

செந்தமிழ் நாடெனும் போதினிலே

இன்பத் தேன்வந்து பாயுது, காதினிலே

என்று. அந்த 'கவிதா வாக்கியம்' பெரிய இடத்தில் அமர்ந்துகொண்டு 'சின்னத்தனம்' பேசிடும் பலருடைய ஏளனத்தைப் பொருட்படுத்த வேண்டாம். உயர்ந்த எண்ணம் கொள்! என்றன்றோ கட்டளையிடுகிறது. 'நாம்' தமிழ் நாடு என்ற பெயர் பெற்றிடக் காரணமாக இருந்தோம் என்ற தித்திப்புக் கலந்திடும் பொங்கற் புதுநாள், இந்த ஆண்டு.

போதும் என்று நான் கூறவில்லை; அத்துணைப் பேதமை என்னைப் பிடித்தாட்டவில்லை.

தமிழகத்துக்கு வளமளிக்கவேண்டிய பருவ மழை தவறிவிட்டது. ஏரி குளம் குட்டைகள் வறண்டு கிடக்கின்றன, வயல்கள் வெடித்துக் கிடக்கின்றன, பல மாவட்டங்களில். எண்ணிடும்போதே கவலையும் கலக்கமும் மிகத்தான் செய்கிறது. எனினும் இந்த நிலையை மனதிலே எண்ணி, இதம்தரும் பல

செயல்களை அந்த இடங்களிலே மேற்கொள்ளும்படி திட்டமளிக்கப்பட்டிருக்கிறது.

'தமிழ் நாடு'—என்ற பெயர் கிடைப்பதால் கிடைத்திடும் பெருமிதம் காலமெல்லாம் நிலைத்து நிற்கும்; நமது வழிவழி வருவோருக்கெல்லாம் நம்மைப்பற்றி அறிவிக்கும்; வரலாற்றில் இடம் பெறும்; பருவமழை தவறுவதும் வறட்சி மிகுவதும்; பஞ்சநிலை தலைதூக்குவதும் என்றென்றும் இருப்பதல்ல; திங்கள் சில.

எனவே தான், தம்பி! எப்போதுமே எழுச்சியுடன் நடாத்திடும் பொங்கற் புதுநாளை இவ்வாண்டு புதியதோர் எழுச்சியுடன் கொண்டாடிடக் காரணம் இருக்கிறது என்பதனை நினைவு படுத்துகின்றேன்.

உடையார்க்கே,—விழாவெல்லாம்; ஏழையர்க்கு ஏது? என்ற கேள்வியிலே தொக்கியுள்ள நியாயத்தை நான் மறுப்பவனல்ல. தமிழக முழுவதும் விழாக் கோலம் கொள்ளக்கூடிய விதமான வளம் கொழித்திடவேண்டும் என்று விரும்புகிறேன்; அதற்கான வழிகள் யாவை என்பதுபற்றி ஆய்வாளர்களிடம் அறிவுரை கேட்டுப் பெறுகிறேன்; திட்டம் பல தீட்டப்படுகின்றன; ஆனால் அவைகளை நிறைவேற்றத் தேவைப்படும் பணம்? இந்தியப் பேரரசிடமல்லவா முறையிடவேண்டி இருக்கிறது. முறையிடுகிறேன்—கனிவும் பணிவும் குறையாமல்;—வம்பு வல்லடிப் போக்கு துளியுமின்றி — ஆனால் கிடைக்கிறதா? நிரம்ப! காரணங்கள்! நியாயங்கள்! வாதங்கள்! எதற்கு? இவ்வளவுக்குமேல் பணம் தருவதற்கு இல்லை என்பதற்கு! என்செய்வேன்? அண்ணன் ஏன் எப்போதும் கவலைப்பட்டபடி இருக்கிறான் என்று சில தம்பிகள் கேட்கவே செய்கிறார்கள். நான் கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்.

> ஆகவேதான் மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத் தக்கவிதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்குநாள் வளர்ந்தபடி இருக்கிறது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி. நமது கழகம் மட்டுமின்றி வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதனை வலியுறுத்த முன்வந்துள்ளன. அரசியல் கட்சிகளைச் சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றனர். 'நாம்' அரசு நடாத்தியதால் கிடைத்திருக்கின்ற நற்பலன்களிலே இதனை ஒன்று என்றே நான் கருதுகின்றேன்.

தமிழகத்தின் தனித் தன்மைகள், சிறப்புகள் குறித்துப் பேசுவதனையே இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு பயப்பதாகும் என்று பேசுவார் உளர். இங்கு கூட! அங்கு உள்ளவர்கள் அகமகிழ்வார்கள் என்ற நினைப்பினர்!

தமிழகத்திற்கென்று இருக்கின்றனவே தனிச் சிறப்புகள்—என் செய்வது! எப்படி மறப்பது! எப்படி மறைப்பது!!

> யாதும் ஊரே; யாவரும் கேளிர்
>
> பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்
>
> மெய்ப் பொருள் காண்பது அறிவு
>
> யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
>
> கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு

இவைகளை எங்கனம் மறந்திட இயலும். வேறு எங்கும் இந்த எண்ணம் ஏற்படாத நாட்களில், இவை தமிழகத்திலே மலர்ந்தன என்ற உண்மையை எப்படி மறைக்க முடியும்! ஏன் மறைக்கவேண்டும்?

சிலர் எதிர்க் கூச்சலைக் கிளப்பியபடி இருப்பினும், 'இன்றையத் தமிழர், தமிழகத்தின் தனிச் சிறப்பினை பெருமளவிற்கு உணர்ந்து எழுச்சி பெற்று வருகின்றனர். தமிழகத்து வரலாற்றுத் துறையிலும், இலக்கியத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் மேலும் மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படின் தமிழரின் தனிச் சிறப்புகள் முழு அளவு கிடைக்கப்பெறும் என்பது மட்டும், அதனைத் தரணி அறிந்து போற்றிடத்தக்க வாய்ப்பும் மிகுந்திடும்.

> இப்போதே, அமெரிக்க ஐரோப்பிய பல்கலைக் கழகங்கள் பல, தமிழ்த் துறைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தமிழரின் தனிச் சிறப்புகளை ஆய்ந்தறியும் ஏற்பாடு, இங்கு இன்னமும் போதுமான அளவுக்கு மேற்கொள்ளப்படவில்லை. உலகமே ஏற்றுக்கொண்ட உயர் நூலாம் திருக்குறளுக்கான ஆராய்ச்சியேகூட அல்லவா இங்கு மேற்கொள்ளப்படாமலிருந்து வந்தது.

> 'இதுகள்' என்ற ஏளனத்தைச் சுமந்துகொண்டிருக்கும் 'நாம்' ஆட்சி நடத்தத் தொடங்கியதன் தொடர்பாக நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டிலே திரட்டிய பணத்தில் ஒன்பது இலட்சம் வெண்பொற் காசுகளைக் கொடுத்தல்லவா மூன்று பல்கலைக் கழகங்களையும் திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபடும்படி ஊக்குவித்திருக்கிறோம்.

வேறெல்லா விழாக்களும், "போகும் இடத்திற்காக" —பொங்கற் புதுநாள் இருக்கும் இடத்திற்காக என்பதனைத் தம்பி! ஆண்டு பலவாக நீ எடுத்துக் கூறி வந்திருக்கின்றாய்.

துவக்கத்திலே இது கேட்டு வெகுண்டெழுந்தோரெல்லாம்கூட, இப்போது உண்மைதானே! என்று கூறிட முன்வந்துள்ளனர். பொங்கற் புதுநாளை ஒட்டி, தம்பி! உன்னால் இயன்ற அளவுக்கு, தமிழரின் தனிச் சிறப்புகளைக் குறித்து எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன். நீ முயன்றால், முடியாததும் இருக்கிறதா! என்னையே முதலமைச்சர் ஆக்கிவிட முடிந்திருக்கிறதே உன்னால்—வேறு எதுதான் செய்திட உன்னால் முடியாது! முயன்றிடு! முனைந்திடு!

போலிப் பெருமை தேடிக் கொள்ளவோ, நாட்டின் பிற பகுதிகளைத் தரக்குறைவாகக் கருதுவதற்காகவோ அல்ல தம்பி! தமிழகத்தின் தனிச் சிறப்புகள் பற்றி நாம் அறிந்திடவேண்டும், அகமகிழ்ந்திடவேண்டும், எழுச்சி பெற்றிடவேண்டும் என்று நான் கூறுவது. பிற பகுதிகளும், உலகின் பல்வேறு நாடுகளும் கேட்டு இன்புறத்தக்க, அறிந்து மேற்கொள்ளத்தக்க பண்பாடு நம்முடையது. அத்தகைய கருவூலத்தை இழந்துவிடுவது நமக்கும் நாட்டுக்கும் மட்டுமல்ல, உலகுக்கே நட்டம் என்பதாலேயே, தமிழகத்துத் தனிச்சிறப்பு இயல்புகளை

நாம் நன்கு அறிந்திடவேண்டும் என்று கூறி வருகிறேன். குறுகிய மனப்பான்மை என்கின்றனர் இதனை; அவர்கள் குறைமதியாளர் என்று கூறிடத் தோன்றுகிறது. பண்பாடு அந்த உணர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிறது. பிளவு மனப்பான்மை என்றும்கூடக் கூறுவார் உளர்! எதனை என்று பார்த் திடும்போது சிரிப்பே வருகிறது.

யாதும் ஊரே

யாவரும் கேளிர்

என்ற பண்பாட்டினை எடுத்துக் கூறுவது, பிளவு மனப்பான்மையாமே! யாழ், காது குடைச்சலை உண்டாக்குகிறது; தேன், குமட்டலைத் தருகிறது, தென்றல் வெப்பத்தை மூட்டுகிறது என்று கூறுவதுபோல அல்லவா இருக்கிறது, தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக் கூறுவது பிளவு மனப்பான்மையை மூட்டிவிடும் என்று கூறுவது? கூறுகின்றனர், உரத்தகுரலிலே கூட! உயர்ந்த இடத்திலே இடம் பெற்று விட்டதனால்! ஆயின் என்ன?மிகப்பெரிய இடத்திலே உள்ளவர்கள் கூறுகின்றனரே அவர்தம் கருத்துக்குமாறாகநாம் நடந்துகொள்ளப்போமா என்ற எண்ணம் எழும்போது தம்பி!

நெற்றிக் கண்ணைக்

காட்டினும்

குற்றம் குற்றமே

என்பது செவியினில் வீழ்கிறது; உண்மையை உரைத் தாகவேண்டும் என்ற உறுதி பிறக்கிறது.

வான் கோழி கண்டால் வருத்தப்படுமே என்று எண்ணி தோகையை கீழே உதறிப் போட்டுவிடுமா கலாப மயில். காக்கைக்கு வருத்தமாக இருக்குமே என்பதற்காகப் பச்சைக் கிளி கருப்புப் பூச்சைத் தேடிக்கொண்டிருக்குமா? பிற நாடுகளும், நமது நாட்டின் பிற பகுதிகளும் பெற்றிராத கருத்துக் கருவூலத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுவது எந்த வகையிலும் தவறு அல்ல; எத்தகைய தீமையும் தந்திடாது; எவருக்கும்.

தமிழரின் தனிச் சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற் கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக் கூறவும் பொங்கற் புதுநாள் ஏற்றது என்பதாலேயே பெரியோர்கள் இதனைத் தமிழர் திருநாள் என்றழைக் கின்றனர்.

பழம் பெருமை பேசி பெருமூச்செறிந்து கொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள். செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கற் புது நாளில், செயலார்வம் மிகுந்திடுவது இயல்பு, செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும், பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைத்திடத் தக்க முறை கண்டாக வேண்டும். வெள்ளம் அழித்திடும்; —வாய்க்கால் வளமூட்டும். செல்வம் சிலரிடம் சென்று குவித்திடுவது வெள்ளத்துக்கு ஒப்பானது; அது கொண்டவனையும் அழித்திடும், சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும். எனவேதான்—சிந்தனையாளர், செல்வம் பெருக்கிட வேண்டும். அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும் என்று எடுத்துக் கூறினர். நமது அரசுகூட அந்தச் சமதர்ம இலட்சியத்தைப் போற்றுகிறது; நமது கழகம் சமதர்ம நெறியிலே நம்பிக்கையும் நாட்டமும் கொண்டிருக்கிறது. ஆனால் நடைமுறைக்குள் புகும்போது, தம்பி! ஆயிரம் ஆயிரம் தடைகள், எதிர்ப்புகள், ஆபத்துகூட!

ஆண்டவனே! ஏனோ எனக்கு இந்தச் சோதனை; இத்துணை வேதனை என்று ஏழை இறைஞ்சுகிறான். செல்வவான், ஆண்டவன் அருளால் நான் பெருநிதி பெற்றேன், இதனைக் குறை கூறுவது தர்மமா? என்று நியாயம் பேசுகிறான்.

மொரேவியா நாட்டில் பணம் பெட்டியில் தூங்குகிறது; பணக்காரன் பட்டு மெத்தையில் தூங்குகிறான்; ஆண்டவன் சொர்க்கத்தில் தூங்குகிறார்; இல்லாவிடில் தெருவில் ஏன் இத்தனைப் பிச்சைக்காரர்கள்? என்றோர் பழமொழி உண்டு.

இந்த நிலை கண்டு மனம் வெதும்பிய நிலையில், பொங்கலாம் பொங்கல்! யாருக்கு? ஏழைக்கு ஏது அந்த இன்பம்?—என்று நமது இளங்கவிஞர்கள் கேட்கின்றனர். அந்தக் கேள்வியிலே உருக்கமும் இருக்கிறது; உண்மையும் இருக்கிறது.

இந்த நிலையைக் கண்டு மனம் வெதும்பி கவிஞர் இராசேந்திரன்,

தைத்திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்

தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்

நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சிகொள்வர்

நிதிபடைத்த சீமான்கள்; என்றும் எங்கள்

கைதொட்டு வாய்பட்டதுண்டோ பொங்கல்

கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!

தெய்வங்கள் திருநாட்கள் எங்கட்குஇல்லை

தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்?

என்று கேட்டிருக்கிறார். மிகைப்படுத்திக் கூறுகிறார் என்று எவரும் கூறிடார்! ஏழ்மை நெளிகிறது! அதிலும் வளம் பெற்றளிக்கும் பாட்டாளிகளிடம்! இது நீதியல்ல; தமிழர் நெறியுமாகாது. இந்நிலை மாறிட, எல்லோர்க்கும் வாழ்வில் இன்பம் கிடைத்திட நாம் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பிற்கு ஏற்ற முறையில் பணியாற்றிட வேண்டும். தமிழர் திருநாளில் தமிழர் அனைவரும் களிப்புடன் கலந்துகொள்ளத் தக்கதான சமுதாய அமைப்புமுறை காணப் பாடுபட்டாக வேண்டும். உவகை தந்திடும் இந்நாளில் இதற்கான உறுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்நிலை, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா எங்கணும், இருந்திடக் காண்கின்றோம்.

இந்தியாவின் தொழில் பொருளாதாரம் 20 இலட்சம் பங்குதாரர்களின் கையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 500 முக்கிய கேந்திரத் தொழில்கள், நிதி ஸ்தாபனங்கள், கம்பெனிகளில் எடுத்துப் பார்க்கும்போது அவற்றில் 3128 டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை யார் என்று உற்றுக் கவனித்தால் 1013 பேர்கள்தான்

இந்த 500 கம்பெனிகளில் டைரக்டர்களாக இருக்கிறார்கள் என்பது புலப்படும். 1013 டைரக்டர்கள் யார் என்று கவனித்தால் அவர்களில் 800க்கு மேற்பட்டவர்கள் 20 குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ அவர்களுக்கு உட்பட்டவர்களாகவோ இருப்பதைச் சுலபத்தில் காணலாம். இந்த 20 பெரிய திமிங்கிலங்கள் பாங்குகளையும் இன்சூரன்ஸ் கம்பெனிகளையும் நிர்வகிப்பதன் மூலமாகவும், நம் தொழில், பொருளாதாரத்தின் தன்மையையும், வேகத்தையும், போக்கையும் நிர்ணயித்து நிர்வகிக்கும் சக்தி பெற்றவர்களாக விளங்குகிறார்கள்.

என்று அசோக்மேதா சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதினார். இன்றைய நிலை, அதனைவிட மோசம் என்கின்றனர் நிபுணர்கள். ஆனால் இதனை மாற்றி அமைத்திடத் தக்க முறைகளை நமக்கு இந்திய அரசியல் சட்டம் போதுமான அளவுக்கு அளிக்கவில்லை. எனவேதான் எங்களுக்கு ஏது பொங்கல்? என்று ஏழை கேட்கும் நிலை நீடிக்கிறது.

ஆனால் தம்பி! மனம் வெதும்பி இதுபற்றிக் கூறிய கவிஞரே, பிறகோர் இடத்தில்

தைத் திருநாள் வருகை பார்தம்பி! வெல்லத்
தமிழ் உள்ளம் தனில் இன்ப வெள்ளம் சேர்க்கும்
மெய்த்திருநாள் மேன்மைபார்! அறிவை வாட்டி
மெலியவைக்கும் தேவையற்ற பண்டிகைகள்
பொய்ந்தினிமேல் போய்விடும்! பார் வானில் பாயும்
புலிச்சின்னப் புகழ் மன்னன் கரிகாலன்றன்
கைத்திருவாள் வெளிச்சம்போல் மின்னுகின்ற
கதிர்மணியின் குவியல்பார்! கரும்பைப் பார்!

என்று எழுச்சியுடன் பாடுகிறார். தமிழ் கற்றுணர்ந்தவர்கள் அனைவருமே இதுபோலத்தான்; சமூகத்தில் மூட்டி விடப்பட்டுள்ள கேடுகளைக் கண்டு மனம் வெதும்பினாலும், பொங்கற் புதுநாளை மட்டும் தமிழர் தமது திருநாளாகக்கொள்ளவேண்டும் என்பதனை எடுத்துரைத்து வருகின்றனர்; காரணம் மற்றைய பல விழாக்கள்

கொடுத்து வைத்தது அவ்வளவுதான்
நாம் வந்த வழி அது.
இங்கு துன்பம், அங்கு இன்பம் கிட்டும்.

என்ற எண்ணங்களுக்கு முதலிடம் தருவன. தமிழர் திருநாளாம் பொங்கற் புது நாள் தனித்தன்மை பெற்றது.

உழைப்பே செல்வம்.
உழைப்பே உயர்வு.
உழைப்பின்றி உலகு இல்லை.

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

பணம் படைத்தவர்கள், அது எந்த வழியிலே கிடைத்தது என்றாலும் சமூகத்திலே முன்னிடம் பெற்றுவிடுவது காண்கிறோம். அந்தப் பணம் பண்பை அழிப்பதுடன், சமூகத்தில் பல முறைகேடுகளை மூட்டி விடுகிறது.

பொங்கற் புதுநாள். சமூகத்தின் கோணங்களை நிமிர்த்தியாக வேண்டும் என்ற குறிக்கோள் கொண்ட உன் போன்றாருக்கென்றே அமைந்துள்ள விழாவாகும்.

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால், சமூகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.

காலத்தை வீணாக்காமல் சமூகத் தொண்டாற்ற ஓர் துடிப்பு உனக்கு உண்டு என்பதனை உணர்ந்த உன் அண்ணன் இன்று உனக்குக் கனிவு நிரம்பிடும் வாழ்த்தினை அளிப்பதுடன், உன் இல்லத்துள்ளார் யாவருக்கும் வாழ்த்துக் கூறுவதுடன், நாடு வளம் பெற, சமூகம் சீர்பெற, சமதர்மம் மலர்ந்திட பாடுபடுவதற்கான உறுதியினை இன்று பெற்றிடுக என்றும் கூற விரும்புகிறேன்.

ஒரு நிமிடம்கூட வீணாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணம். தம்பி! எங்கோ படித்ததாக நினைவு, ஒரு நிமிடத்தில், விண்ணிலிருந்து 6000 விண் கற்கள் விழுகின்றன; பூமி தன்னைத்தானே 950 மைல் வேகத்தில் சுற்றுகிறது; 100 பேர் இறந்துபடுகின்றனர், 114 குழந்தைகள் பிறக்கின்றன. 34 திருமணங்கள். 16 விவாக விடுதலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன; 68 மோடார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதாக.

காலம் அத்துணை மதிப்பு வாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச் செய்திடும் ஆற்றல் பெற்ற நீ, தமிழக அரசியலையே மாற்றி அமைத்த நீ, உன் கடமையைச் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருப்பாய் என்பதனை நான் நன்கு அறிவேன். எனினும் அண்ணன் என்ற உரிமையுடன் உனக்கு அந்தக் கடமையை நினைவுபடுத்துவது எனக்கோர் மகிழ்ச்சி தந்திடுவதுபோல உனக்கும் மகிழ்ச்சி தந்திடும் என்பதிலே ஐயப்பாடு இல்லை.

என்னைப் பொறுத்த மட்டிலே தம்பி! நலிவைத் தாங்கிக் கொண்டபடி என்னால் இயன்றதைச் செய்துகொண்டு வருகின்றேன்.

தாத்தாவுக்கு ஏன் கைவலி தெரியுமா...எழுதுவதாலே!—என்று என் பேரன் மலர்வண்ணன் — என் மகன் டாக்டர் பரிமளம் பெற்ற செல்வம் — கூறுகிறான். உண்மைதான்! வலி இருக்கத்தான் செய்கிறது—ஆனால் தம்பிக்கல்லவா கடிதம் எழுதுகிறேன்; அது தனியானதோர் சுவையைத் தருகிறது. மகிழ்ந்திரு! விழா நடத்திடு! வேலை மிகுதி இருக்கிறது என்ற நினைவுடன்.

அண்ணன்,

அண்ணாதுரை

சிறப்புக் கட்டுரை!

வங்கத்தின் சிங்கநாதம்

"மத்திய அரசுக்கு அடங்கி நடக்கும் மாநில அரசுகளே ஏற்படவேண்டும்" என்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவிருக்கும் இந்த நேரத்தில் எடுத்துக் காட்டியிருப்பது சிறப்பான சிந்தனைக்குரியதாகும். பிரதமர் சர்வாதிகாரப் பாதையில் நடையிடத் தொடங்கிவிடுவாரோ என்று எண்ணச் செய்யும் இந்தக் கருத்து, மறுபடியும் செயல்படும் நிலை நாட்டில் உருவாகுமானால், அதன் விளைவு ஒரு "வங்காள தேச"மாகத்தான் ஆகும் என்று சிந்திக்க வழி வகுத்திருக்கிறது இந்தக் கட்டுரை.

வங்க நாடு உருவானதற்கான காரணங்களின் வெளிச்சத்தில் சிங்கத் தமிழகத்தின் மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஆராய்வது இந்திய நாட்டின் பொது நன்மைக்கு உகந்ததாகவே இருக்கும். இந்தியாவின் பொதுவலிமை சிறந்து மேலோங்க மாநிலங்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கிடுவது என்ற தத்துவம் ஒரு காலத்தில் பிரிவினை வாதம் பேசிவந்த நம்முடைய இதயங்களில் மட்டுமல்ல காந்தியடிகள் வழியே, வழி என்றும் காங்கிரசே கட்சி என்றும் கொண்டு இந்திய விடுதலை—ஒருமைப்பாட்டுக்கு ஓயாது—உழைத்த—உழைக்கிற நம் அருமைச் சிலம்புச் செல்வரின் இதயத்திலும் உதித்துத் — துளிர்த்தத் தத்துவமாகும். வங்க நாடு உருவானதற்கான காரணங்களின் வெளிச்சத்தில் மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஆராய்வது நேரத்தோடு ஒட்டிய நேரிய செயல் என்று எண்ணுகிறோம். காலங் கடந்து ஆராய முற்படுவதற்குப் பதில் காலத்தோடு எதனையும் எண்ணிப் பார்ப்பது மிக்க நலம் பயக்கும்.

வங்க நாடு உருவானதற்கான காரணங்களில் முதலாவது, மொழி! பாகிஸ்தானைத் தோற்றுவித்த ஜனாப் ஜின்னா முதல் வங்க நாடு தோன்றுவதற்கு, ஒரு வழியில் உதவிய மனித கசாப்புக்காரனை யாகியாகான் வரை பாகிஸ்தான் அதிபர்கள் 'அனைவரும் கிழக்கு வங்கத்துக்கும் சேர்த்து உருதே ஆளும் மொழி என்று வங்க மொழியினரின்மீது மொழி ஆதிக்கம் செலுத்த முனைந்தது வங்க மக்களின் எழுச்சிக்கு ஒரு காரணம்; அதுவே வங்க நாடு அமைவதற்கும் உரிய காரணங்களில் ஒன்று! உள்ளத்தில் கள்ளமில்லாமல் — எப்போதும்போல் வங்க மொழி வல்லவர்கள் தங்கள் பணிகளில் ஈடுபட்டிருந்தால்கூட —அதுவும் 'அரசத் துரோக'மாகக் கருதப்பட்டு கண்டிக்கவும் இராணுவ முறையில் தண்டிக்கவும் பட்டதை உலகு அறியும். மனித உருவம் கொண்டிருந்த மிருகம் யாகியாகானின் ஏவலனாய் — வேட்டை நாயாய் டாக்காவிலிருந்த திக்காகான், வங்காள மொழித் துறையின் பேராசிரியராக விளங்கிய முனீர் சௌத்திரியை எச்சரித்தான்:

"I Lieutenant-General Tikka khan., as Chancellor of Dacca University hereby warn you, Dr. Munier Chouwdhury, Professor of Bengali Department, Dacca University, that you will not indulge in the anti-State activities in the future."

புலவர். கோ. அண்ணாமலை

திக்கா கானின் கையெழுத்திட்ட கடிதம் வங்க மொழியறிஞர் முனீர் சௌத்திரி போன்றவர்களின் அஞ்சாத நெஞ்சங்களை மிரட்ட — ஒடுக்க பயன்பட்டிடவில்லை; முடிவாக வங்க மொழிதான் இன்றைக்கு அங்கே ஆட்சி மொழி என்கின்ற நிலை உருவெடுத்து விட்டது!...

வங்காளிகளுக்கு வங்க மொழி எப்படியோ அப்படியே தமிழர்க்குத் தமிழ். அதற்கு ஊறு தேடவோ—அதன்மீது ஆதிக்கம் செலுத்தவோ யார் முயன்றாலும் அவர்கள் வங்கத்தின் நிலையை இங்கும் உருவாக்கும் குற்றத்தைச் செய்தவர்களாகவே கருதப்படுவர்—கருதப்படலும் வேண்டும்!

வங்கம் உருவாவதற்கான இரண்டாவது பெரிய காரணம், பொருளாதாரம்! கிழக்கு வங்க மக்களின் வளங்களிலிருந்து சுரண்டி மேற்குப் பாகிஸ்தானில் குறிப்பிட்ட சில குடும்பங்கள் செல்வத்தைக் குவித்துக்கொண்டு நாட்டை ஏழ்மையாக்கிய நடை முறை! இதே அளவுக்குத் தமிழகத்தினையும் மற்ற மாநிலங்களையும் பொறுத்தவரை ஏதும் இல்லை என்றாலும், ஏதோ ஒரு அளவுக்கு ஒரு குறிப்பிட்ட சில குடும்பங்கள் இந்தியாவின் பொருளாதாரத்தைப் பிடித்து அதன் குரல்வளையை நெரித்து வந்திருக்கின்றன, கடந்த கால்நூற்றாண்டுக் காலமாக என்பது கசப்பு மிக்கதாயினும் யாவரும் ஏற்றுக் கொண்டுவிட்ட உண்மை. அந்த உண்மை காரணமாக இந்தியாவின் பொருளாதாரம் சீர்குலைய—அந்தச் சீர்குலைவு தமிழகத்தையும் பாதித்ததை—பாதிப்பதை யாரும் மறுக்க இயலாது! 'உள்நாட்டு மக்களைச் சுரண்டி வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் பொருளைக் கொண்டுபோய்ச் சேர்த்திருப்போர் அவற்றைத் திரும்பவும் பாகிஸ்தானுக்குக் கொண்டு வந்தாக வேண்டும்'—என்று புட்டோ, பாகிஸ்தானத்தின் குறிப்பிட்ட சில குடும்பங்களை முதலில் கேட்டுக்கொண்டார்! தொடர்ந்து, அப்படிக் கொண்டு வராவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா என்று தனக்கே உரிய பாணியில் மிரட்டியும் இருக்கிறார். பாகிஸ்தானத்தின் முழுப் பொருளாதாரமும் இருபது குடும்பங்களின் கையில் தான் இருக்கின்றது என்கிற உண்மையில் வங்க நாட்டின் வறுமைக்குரிய காரணம் எவ்வாறு புகுந்திருக்கின்றதோ அவ்வாறே, இந்தியாவில் நேருவின் காலந் தொடங்கிக் குறிப்பிட்ட ஒரு நூறு குடும்பங்களின் திரண்டெழுந்த பொருள் வளர்ச்சியில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் வறுமை நிலைக்கான காரணம் ஒளிந்திருக்கின்றது.

அடுத்து வங்க நாடு உருவானதற்கான காரணங்களில் ஒன்று இது: இராவல்பிண்டிக்கும் டாக்காவுக்கு மிடையிலான — இயற்கையமைப்பில் உண்டாகியிருந்த — தொலைவு, நடுவிலே வேறு நாடு இல்லை—சொந்த நாடுதான் எனினும் டில்லிக்கும் சென்னைக்கும்

அந்தத் தொலைவு இருக்கவே செய்கிறது அந்தத் தொலைவு காரணமாக அங்குள்ளவற்றை இங்கும் இங்குள்ளவற்றை அங்கும் தவறாகப் புரிந்துகொள்ளும் 'அசம்பாவிதங்கள்' ஏற்படுகின்றன என்கிற உண்மைக்கு வரலாற்றில் நிறைய நிகழ்ச்சிகள் காட்ட முடியும்.

எல்லோரும் அறிந்த இன்றியமையாத பெரிய காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குரிய மதிப்பு அளிக்கப்படாமை! தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர்களை நம்பாமல் துப்பாக்கி முனையை நம்பி அவர்களைக் கொடுமைப்படுத்திய யாகியாவின் போக்கு! அவனுடைய போக்குக்குச் சொந்த நலனைக் கருதி ஒரு புகழ் மிக்க இனத்தைக் காட்டிக் கொடுக்க முனைந்த துரோகக் கும்பலின் நரித்தனம்! இதே காரணங்கள் சில வேளைகளில்—தமிழ் நாட்டுக்கும் பொருந்தி விடுமோ என்றஞ்சத் தகுந்த வகையில்—குறிப்பிட்ட சில முதன்மையான பிரச்னைகளில் மத்திய அரசின் போக்கையும் அதற்குத் துணை போகும் தன்னலம் கருதும்—இனத் துரோக மனிதர்களின்—நன்றியற்ற செயல் முறையும் அமைந்து விடுகின்றன.

மத்திய அரசில் கொலுவீற்றிருப்பவர்களுக்குத் தாங்கள் மட்டுமே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றும் மாநில அரசிலுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர்களே எனினும் மதிப்புக் குறைந்தவர்கள் என்றும் ஓர் எண்ணம், அதிகாரக் குவியல்களின் காரணமாக, இருந்து வருகிறது. அது காரணமாக இங்கே—மாநிலத்தில் உள்ளவர்கள் செய்யும் முடிவுகளை—விடுக்கும் வேண்டுகோள்களை மிக எளிதாக மறுத்துவிடவும், அதே சமயம் அவர்கள் விரும்புவதை மாநிலத்தவர் மீது அவர்களுக்கு மாறுபட்டதாயினும் திணித்து விடவும் தயங்குவதில்லை. இத்தகையப் போக்கு யாகியாவின் இராணுவக் கொடுமையுடன் ஒப்பிடக்கூடாத — முடியாத சிறிய அளவினதாக இருக்கலாம். ஆனால், 'தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளை மதிக்காத தன்மை' என்ற அளவுகோலைக் கொண்டு பார்க்கிற போது இரண்டிலும் எண்ணத்தினளவில்வேறுபாடில்லை என்பதை உணரலாம்.

'காவிரிநீர்த் தகராறுக்கு டிரிப்யூனல் அமைத்திடுக' என்றெழுந்த அனைத்துத் தமிழகமக்களின் ஒங்கு குரலுக்கு மத்திய அரசு திருப்பிய கேளாச்செவி, சேலம் இரும்பாலை அமைப்பதில் காட்டிய மெத்தனம் — இரும்பாலை வேண்டுகோள், வேண்டுகோளாகவே இருந்த போது தமிழகத்து மனிதரே எஃகு இரும்புத்துறை அமைச்சராக இருந்தும் காட்டிய 'முதுகுப்புறம்' சிம்சன் பிரச்சினையில் காட்டிய சுறுசுறுப்பு மேட்டுக்குடி மிட்டாவின் மிரட்டல், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துநின்ற தமிழகத்து வருங்காலச் சந்ததியினரைச் சுட்டுப் பொசுக்கிமேலிடத்து 'மெடல்' பெற்ற இரும்பு நிர்வாகிகளின் இனத்துரோகம்போன்ற எடுத்துக்காட்டுகளை நம் சிந்தனைக்கு ஆதாரமாகச் சிலர் எண்ணிப் பார்க்கக் கூடும். ஆனால் அவைகளால் மட்டும் எழுந்ததல்ல நம் சிந்தனை. இன்றைக்கு மத்திய அரசில் வீற்றிருப்போர் நல்ல ஜனநாயக மரபுகளைப் பின்பற்றும் பக்குவம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஒருவேளை ஜனநாயகப் போர்வைக்குள் யாகியாகான் போன்றவர்கள் நுழைந்து கொண்டுவிட்டால் நிலைமை என்னவாகும் என்கிற வினாவும், அதுவேபோல இங்கே - மாநிலத்திலும் பணிந்துபோக இயலாதவர்கள் உருவாகிவிட்டால் என்னவாகும் என்கிற வினாவும் அடித்தளமாக அமைய இந்தச் சிந்தனைகள் உருப்பெறுகின்றன. எப்படிப்பட்டவர்கள் எங்கே தோன்றினாலும் மோதல்கள் ஏற்பட்டு ஒருமைப்பாடும் ஒற்றுமையும் சிதைந்துவிடாதபடி நாம் இப்போதே சில திட்டவட்டமான மாறுதல்களுக்கு நம்மைத் தயார்படுத்திக் கொள்வது நல்லது. திட்டவட்டமான மாறுதல்கள்—எவற்றைக் குறித்து? மேலே நாம் காட்டிய - வங்கநாடு உருவானதற்கான காரணங்கள் இங்கும் நிலவுகின்ற தன்மை குறித்து!

மொழி, பொருளாதாரம், இந்தியத் தலைநகருக்கும் பிறமாநிலங்களுக்கும் உள்ள தொலைவு, மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை மத்தியிலுள்ளோர் மதிக்காமைஆகிய இரண்டு காரணங்களோடு இன்றியமையாத இன்னொன்று. அந்தந்த மொழிவாரி மாநிலத்தின் தனிப் பழம்பண்பாடுகள்! ஆம்; வங்கம் உருவானதற்கான காரணங்களில் முதன்மையான பண்பாடு வங்க மக்களின் மொழியுணர்வும் பண்பாட்டு பற்றுதலும் சொல்லொணா துயரங்களைத் தாங்கும் ஆற்றலை அந்த மக்களுக்கு அளித்தன என்பதை யாவரும் கண்டிருக்கின்றோம். தங்கள் மொழியும் பண்பாடும் நிலைக்கவும் தழைக்கவும்வேண்டுமென்று அவரவரும் எண்ணுதல் இயல்பே. அதன்மீது ஆதிக்கம் குறுக்கிடு தலையீடு எதனையும் கண்டுவிட்டால் எத்தகைய மக்களும் சீறி எழுவர். அவ்வாறு சீறி எழும் நிலைக்கு எந்த மாநிலத்தையும் ஆட்படுத்தாமல் நடந்து வர வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது! இந்தப்பொறுப்பைத் தமிழகத் தலைவர்கள் கேட்கும் 'மானிலத் தன்னாட்சி'யை, வழங்குவதன் மூலம் சரிவர நிறைவேற்றலாம். இல்லாவிட்டால் இங்கும்—இந்தியாவிலும் வங்க நாடுகள் தோன்றக் காரணமாயிருந்த குற்றத்துக்குக்கு ஆட்பட வேண்டிவரலாம் ஏனென்றால் மொழியின் மீதும் பண்பாட்டின் மீது அந்தந்த மொழி பண்பாட்டில் அந்தந்த மக்களின் ஈடுபாடு அப்படி. மொழி பற்றியும் -பண்பாடுபற்றியும்தான் பிரதமரானவுடன பேசிய இதழாளர்களின் கூட்டத்தில் முழங்குகிறார் முஜிப்:—

'வங்க நாட்டைவிட்டு வெளியேற விரும்பும் யாரானாலும் அப்படியே செய்யலாம். ஆனால் இங்கேயே தங்கி வாழ விரும்புவோர் வங்க மொழியையும் பண்பாட்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்கிறார்.

'Anyone who wanted to leave the Country was free to do so. But those who wished to remain should accept Bengali language and calture.'

பொதுவாக முஜிபின் முழக்கங்கள் அறிவிப்பதென்ன? சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் வங்கத் தந்தை முஜிபின் முழக்கம், நம் இந்தியநாட்டின் பெரும் தலைப்பீடத்து மனிதர்களிடம் மாநிலங்களின் வேண்டுகோள்களைக் குறையீடு முறையீடுகளை அதிகாரத்தால் அடக்கி ஒடுக்க எண்ணும் எண்ணத்தில் மாற்றம்!வங்கம்தோன்றுவதற்கான காரணங்கள் இங்கும் அங்கங்கே தோன்றாமல் பாதுகாத்தல்! தோன்றிவிட்டிருக்கும் காரணங்களுக்குக் கெடுபிடிச் சட்டங்களால் அல்லாமல் சுயாட்சி- மாநிலங்கள் தங்களளவில் தன்னிறைவு பெற்ற தன்னாட்சி அடைந்திடச் செய்யும் சட்டங்களால் நல்ல பரிகாரம் தேடுதல் ஆகிய இன்னோரன்னவற்றை நோக்கி மிக விரைவாகச் சிந்திக்கவும் செயல்படவும் இதுவே பொருத்தமான வேளை என்பதனையே வங்கத்து சிங்க நாதம் போதிக்கிறது.

சிங்கநாதம் கேட்டு விழிக்க வேண்டியவர்கள் விழித்தெழுந்திடுங்கள்! இன்றேல், வங்கமாகும் நிலையை எல்லா மாநிலங்களுக்கும், ஒருவேளை முதன்முதலாகத் தமிழகத்துக்கு உருவாக்கிக் கொடுத்த குற்றத்தைச் சுமந்துகொண்டு சரித்திரத்தில் அலைவீர்கள்! *

உரைகல்

தத்துவங்களின் தேரோட்டம்

நூலாசிரியர் :

முரசொலி அடியார்

விலை ரூ. 1-25

வெளியீடு :-மல்லி பதிப்பகம்,

சி. 11/42, பூபதி நகர் காலனி,

கோடம்பாக்கம், சென்னை - 24.

தத்துவ எழுத்தாளர் முரசொலி அடியாரின் சீரிய செந்தமிழ்ப் படைப்பு, இந்நூல். இந்தியாவிலேயே நக்சல்பாரிகளைப் பற்றிய வரலாற்றையும் தத்துவத்தையும் விளக்கும் முதல் நூல் இதுவாகும். அடியார் எனும் பெயர் மயிலிறகுப் பின்னணியில் இருக்கும். ஆனால் அவர் படைப்போ மன வலிமைப் பின்னணியில் அமையும். மறம் கொப்பளிக்கும் அவர் எழுத்துக்கள், மாத்தமிழின் மாணிக்கப் பரல்கள்; தத்துவக் கோபுரத்தின் தங்கக் கலசங்கள்; சிந்தனைப் பெருமலையின் சிகரங்கள்; தத்துவத் தேரின் தெய்வப் பதுமைகள்!!

ஆம்! அடியாரின் தமிழ் நடை எனில் ஒரு தனித்தன்மை இருக்கத்தான் செய்கிறது. 'வளமைமிகு தமிழை வலிமைமிக எழுதும் ஆற்றல் பெற்றவர்' எனத் தமிழகத்தின் சரிதநாயகனே சான்றிதழ் வழங்கியுள்ளார்.

"எழுதியோன் எழுதுகிறான்" என அவர் வடித்திருப்பது, முன்னுரையா? தத்துவத்தின் முன்னோடியா?...வியக்கிறோம்! அடியாருக்கே உரிய அழகிய நடை; ஆணித்தரமாகக் கருத்தை விளக்கிச் செல்லும் அற்புதத் திறன்... அப்பப்பா!!

உருசிய நாட்டின் நக்சல்பாரிகளைப் பற்றி விளக்கும் கட்டுரையின் இறுதியில், "அவர்கள் உணர்வுகள் மதிக்கப்படவேண்டியவை" என்னும் லெனின் கருத்துடன் முடித்திருக்கும் திறன், 'தொடர் கதை'யின் அத்தியாயம் முடியும் பான்மையில் அமைந்திருப்பது புதுமையினும் புதுமை!

மாவோ பார்வையில் நக்சல்பாரிகளை விளக்கும்போது,

"(சமுதாயத்) தேரை அசைத்து முன்னேற்ற முன்னே இழுக்கவும் வேண்டும்; பின்னே தள்ளவும் வேண்டும்; அதை விட்டுவிட்டுத் தேருக்குப் பதிலாக நாம் ஓட ஆரம்பித்தால் — தேர் இருக்கிற நிலையில்தான் இருக்கும்" என அடியாரின் தத்துவங்களின் தேரோட்டம் நிகழும்போது, நம் நெஞ்சத்தில் நம்மை அறியாமலேயே இடம் பிடித்துக் கொள்கிறார்!

தீவிரவாதிகளின் தீவிரச் செய்கைகளால் விளையும் தீங்கினைத் தக்க எடுத்துக் காட்டோடு விளக்கிச் செல்கிறார். "...காலம் தவறி முன்கூட்டியே இவர்கள் அறுவடைக்குப் புறப்படுவதால், அறுவடை உண்மையாகச் செய்ய வேண்டிய நேரத்தில் ஆள் இல்லாமல் போய்விடும்......" தீவிரவாதிகளைச் சாடும் தீரமிக்க வரிகள் இவை.

புரட்சிக் கொடியை ஏற்றுகிறபோது அந்த நாடு எப்படிப்பட்டது — என்பதை முதலில் கவனிக்க வேண்டும். எதைப் போல......? எடுத்துக்காட்டுக்கள் அணிவகுத்து நிற்பதைக் காணீர். "விதை தூவுகிறபோது நிலத்தின் மண் வளத்தைப் பார்த்தே ஆக வேண்டும்! ஆடை நெய்கிறபோது நூலின் உறுதியைப் பார்த்தே ஆக வேண்டும். ஓவியம் தீட்டுகிறபோது தூரிகையின் தரத்தைப் பார்த்தே ஆகவேண்டும்!" இவையே அடியாரின் திறனுக்கும் எடுத்துக்காட்டாய் மிளிர்கின்றன.

அதிதீவிரம் என்பது எப்போதும் முரண்பாடு உடையது என்பதனை விளக்கும் திறன் காணீர்:

"ஜலதரங்கச் சப்தமும், சோறு வேகும்போது ஏற்படும் சப்தமும் ஒன்றேபோல் தோன்றும்; ஆனால், ஜலதரங்கம் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது; ஒரு கட்டுப்பான இசையை உண்டாக்கும். சோறு வேகும்போது ஏற்படும் சப்தம்— கட்டுப்பாட்டைப் பொறுத்ததல்ல! கீழே எறியும் தீயை— நெருப்பைப் பொறுத்தது! அதுபோல அதிதீவிரம் மனித உணர்வுகளைப் பொறுத்தது ஆதலால்— மனிதருக்கு மனிதர் அங்கே வேறுபாடு தோன்றத் தொடங்கியது." முரசொலி அடியாரின் முத்திரையை இதில் காணலாம்.

பலாத்காரம் மருத்துவச்சியாகப் பணியாற்றுவதாக மார்க்ஸ் கூறும் கருத்தினை வெற்றிகரமாக அறுவை செய்யும் இறுதிக் கட்டம் நூலுக்கே மகுடமாக அமைந்துள்ளது. "லெனின்கூட உடனே அந்தப் பலாத்கார மருத்துவச்சியை அழைத்துவிடவில்லை" என அறுதியிட்டுக் கூறும்போதும், "முதலாளித்துவ சமுதாயம் கருத்தரித்து — பேறுகாலம் அடைந்த பின்னர்தான் பலாத்காரம் எனும் மருத்துவச்சியே வரவழைக்கப்பட வேண்டும். ஆனால், நமது 'தோழர்கள்' எப்போதும் மருத்துவச்சியுடன் அலைவது சரிதானா?" என வேடிக்கையாக — அதே சமயம் விநயமாக வினாத் தொடுக்கும் போதும் அடியார் அவர்களின் எழுத்துவன்மையை உணர்கிறோம்.

"தமிழ் மொழியின் எழிலையும் வலிமையையும் நளினமாகக் கையாண்டு பெருவாரியான தமிழர்களின் பாராட்டுதலைப் பெற்று வருபவர் முரசொலி அடியார்" எனத் தமிழவேள் கலைஞரே பாராட்டிய பிறகு, அடியாரின் திறனுக்கு வேறென்ன சான்று வேண்டும்?

தத்துவ வித்தகர் அடியார் அவர்களின் "தத்துவங்களின் தேரோட்டம்" தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்தன்மை பெற்ற நூல்; தரமான நூல் என்பதில் ஐயமில்லை.

—மணிவேந்தன், எம்.ஏ.,

விற்பனையாளர்களுக்கு

காஞ்சி விற்பனையாளர்கள் தங்களின் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,

"காஞ்சி", காஞ்சிபுரம்-3.

மூலமாய் இருந்த நெஞ்சு...

— புலவர் அரிமதி தென்னகன் —



மென்மலர் மனத்த ரென்றால்
மேன்மையின் உருவே! அண்ணா!
அன்பிலார் போலே எம்மை
அகன்றுநீர் செல்ல லாமா?
ஒன்றுடன் இரண்டா மாண்டும்
ஓடிட லாமா? அண்ணா!
கன்றெனத் தவிக்க விட்டீர்!
கல்மனம் கொள்ள லாமா?

தலைவனாய் இருந்தீ ரென்றால்
தவித்திடோம்; தலைவ ரெல்லாம்
அலையென வருவர்; போவர்;
அண்ணனே! அறிந்து தானே
நிலைபெறும் அன்பால் எங்கள்
நெஞ்சினைக் கலக்க வைத்தீர்!!
உலகினில் புதுமை யாக
உறவினை வளர்த்து விட்டீர்;

தம்பியாய் எம்மைக் கொண்டீர்;
தலைவராய் இருந்தீ ரல்லர்;
செம்புலப் பெயல்நீர் போல
சிந்தையால் ஒன்று பட்டோம்;
கொம்பினில் பூத்த முல்லைக்
கொத்தென இருக்கச் செய்து
வெம்மையில் யாம்கி டக்க
விரைந்துநீர் பிரிய லாமா?



தந்தையை மறந்தி ருப்போம்;
தாயினைப் பிரிந்து வாழ்வோம்;
சிந்தையில் மனைவி தன்னைச்
சிறையிடா திருப்போம்; இன்பம்
சிந்திடும் மழலைப் பேச்சுச்
சிலைகளை விட்டி ருப்போம்;
உந்தமை மறவோம் என்னும்
உண்மையை மறக்க லாமா?

அண்ணனாய் ஏனி ருந்தீர்?
அன்பினைப் பாலாய் ஊட்டித்
தொண்டனைத் தம்பி யென்று
தொடர்பினை ஏன்வ ளர்த்தீர்?
கண்களைக் குளங்க ளாக்கிக்
கடுகியே பிரிந்து செல்ல
உண்டுமக் காசை என்றால்
உறவினை ஏன்வ ளர்த்தீர்?

நிழலென ஏனி ருந்தீர்?
நெஞ்சினை ஏன்கொ டுத்தீர்?
பழச்சுளை போலி ருக்கப்
பழக்கினீர் ஏனோ அண்ணா?
உழக்கென இருந்த நெஞ்சை
உலகெனச் செய்து விட்டு
அழுதிடச் செய்து நீவிர்
அகன்றிடல் நீதி தானா?

காலனும் கொடிய னல்லன்;
கடுமைநோய் கொடிய தல்ல;
சிலனே! எம்மை விட்டுச்
சென்றிடத் துணிவ தற்கு
மூலமாய் இருந்த நெஞ்சே
முதன்மைசேர் கொடிய தாகும்!!
ஓலமிட் டழுகி றேனே;
ஓய்ந்திடச் செய்ய வாரீர்!!

இந்த வலையில் விழும் பரிசு உங்களைச் சேரட்டுமே!

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு : ஒரு லட்சம் ரூபாய்

மொத்தப் பரிசுத் தொகை:
ரூ. 7,00,000*



மொத்தப் பரிசுகள்: 2132

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

குலுக்கல் நாள்:

25-2-1972

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை
271 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.

* 2 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது.

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.